இரண்டாவது கூடுதல் சார்பு நீதிமன்றம், மதுரை.
முன்னிலை: திரு. ஆர்.ஜோசப்ஜாய், எம்.ஏ.,எல்.எல்.எம்.,எம்.பி.ஏ.,
இரண்டாவது கூடுதல் சார்பு நீதிபதி, மதுரை.
2018ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 11ம் நாள் சனிக்கிழமை
அசல் வழக்கு எண்.190/2012

--------

1. Y.ஜோசப் ஜேசுராஜ்
2. J.தமிழ்செல்வி ... வாதிகள்

/ எதிர் /

1. Y.அமலதாஸ்
2. A.நித்யா ... பிரதிவாதிகள்

இந்த வழக்கு இந்நீதிமன்றம் முன்பு 01.08.2018 அன்று இறுதியாக விசாரணைக்கு வந்தபோது வாதிகள்தரப்பில் வழக்கறிஞர்கள் திருவாளர்கள். என்.சரவணன், ஏ.நடராஜன் ஆகியோர்கள் முன்னிலையாகியும், 1, 2 பிரதிவாதிகள் தரப்பில் வழக்கறிஞர் திரு.கே.முத்தையா பசும்பொன் அவர்கள் முன்னிலையாகியும், போதிய கால அவகாசத்துக்குப் பிறகும் பிரதிவாதிகள் தரப்பில் சாட்சிகளை விசாரிக்கவோ, வாதம் செய்யவோ முன்வராத நிலையிலும், வாதிகள் தரப்பு வாதத்தைக் கேட்டும் வழக்கு ஆவணங்களை பரிசீலனை செய்தும் இன்று இந்நீதிமன்றம் வழங்கும்

## தீர்ப்புரை

பிரதிவாதிகள், வாதிகளுக்கு தாவா தொகை ரூ.6,32,500/-ஐ (ரூபாய் ஆறு இலட்சத்து முப்பத்திரண்டாயிரத்து ஐந்நூறு மட்டும்) வழக்கு தாக்கல் செய்த நாளிலிருந்து தொகை வசூலாகும் நாள் வரை 18 சதவீத வருட வட்டியுடன் சேர்த்து செலுத்த உத்தரவிடக்கோரியும் மற்றும் வழக்கின் செலவுத்தொகை கோரியும் வாதியால் இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**2. வழக்குரை விபரம்:-**

பிரதிவாதிகள் ஏற்கனவே இருந்த கடனை தீர்ப்பதற்காகவும், குடும்ப அவசிய செலவிற்காகவும், தொழில் அபிவிருத்திக்காகவும், வாதிகளிடம் 02.08.2010 அன்று ரூ.5,00,000/- கடன் பெற்றுக்கொண்டு, அக்கடனை வருடத்திற்கு 18 சதவீத வட்டியுடன் வாதிகள் கேட்கும்போது திரும்ப கொடுப்பதாக ஒப்புக்கொண்டு புரோநோட் எழுதிக்கொடுத்தனர். ஒப்புக்கொண்டதுபோல் பிரதிவாதிகள் மாதந்தோறும் வட்டி செலுத்தவில்லை. பலமுறை வாதிகள் கேட்டுக்கொண்ட பிறகும் பிரதிவாதிகள் கடன் தொகையை திரும்ப செலுத்தாததால் 15.06.2011 அன்று பிரதிவாதிகளுக்கு வாதிகள் வழக்கறிஞர் அறிவிப்பு மேற்படி கடன் தொகையை கேட்டு அனுப்பினார்கள். அந்த அறிவிப்பை பெற்றுக்கொண்ட பிரதிவாதிகள் பொய்யான குற்றச்சாட்டுகளை கூறி பதில் அனுப்பினார்கள். எனவே மேற்படி கடனை வட்டியுன் வசூலிப்பதற்காக வாதிகளால் இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**3. 1ம் பிரதிவாதியால் தாக்கல் செய்யப்பட்டு 2ம் பிரதிவாதியால் ஏற்றுக்கொள்ளப்பட்ட எதிர் வழக்குரை விபரம்**:

02.08.2010 அன்று பிரதிவாதிகள் வாதிகளிடம் ரூ.5,00,000/- கடன் பெறவும் இல்லை. அக்கடனுக்காக வாதிகளுக்கு புரோநோட் எழுதிக்கொடுக்கவும் இல்லை. 1ம் பிரதிவாதி, 1ம் வாதியிடம் 30.04.2007ம் தேதி ரூ.3,00,000/- அடமானக் கடன் வாங்கியிருந்தார். அக்கடனில் ரூ.1,50,000/-ஐ 1ம் பிரதிவாதி, 1ம்வாதிக்காக திரும்ப செலுத்தி விட்டார். மீதத்தொகையை கேட்டு வாதிகள் அவர்களது அடியாட்களுடன் 01.05.2011 அன்று காலை 06.00 மணிக்கு பிரதிவாதிகளின் வீட்டிற்குள் அத்துமீறி நுழைந்து, பிரதிவாதிகளை அசிங்கமான வார்த்தைகளால் திட்டி, அடித்து, உதைத்து மிரட்டினார்கள். அதுகுறித்து கருப்பாயூரணி காவல் நிலையத்தில் அன்றையதினமே 1ம் பிரதிவாதி புகார் கொடுத்து மனு ரசீது பெற்றார். மேற்படி புகாரை வாபஸ் வாங்குமாறு

1ம் பிரதிவாதியை வாதிகள் மிரட்டியதால், 07.05.2011 அன்று மதுரை மாவட்ட காவல் துறை கண்காணிப்பாளரிடம் 1ம் பிரதிவாதி புகார் கொடுத்தார். அதன்பேரில் நடவடிக்கை எடுக்கப்படாததால், 16.05.2011 அன்று 1ம் பிரதிவாதி, மதுரை 2வது குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்து, வாதிகளுக்கு எதிராக வழக்கு பதிவு செய்ய, 17.06.2011ல் உத்தரவு பிறப்பிக்கப்பட்டது. அந்த வழக்கில் வாதிகள் நீதிமன்றத்தில் சரணடைந்து பிணையில் சென்றுள்ளனர். அந்த காழ்ப்புணர்ச்சி காரணமாக ஈடுகடன்போக மேலும் ரூ.5,00,000/- வாதிகளிடம் பிரதிவாதிகள் கடன் பெற்றதாக பிரதிவாதிகளின் கையெழுத்தை போலியாக போட்டு தாவா புரோநோட்டை தயாரித்து வாதிகள் இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளனர். ஆகவே இவ்வழக்கை தள்ளுபடி செய்ய வேண்டும்.

4. இவ்வழக்கின் வழக்குரை, எதிர்வழக்குரை பரிசீலிக்கப்பட்டு வழக்கு பிரச்சனைக்கு தீர்வுகாண கீழ்க்கண்ட எழுவினாக்கள் வனையப்பட்டுள்ளன.

1. தாவா புரோநோட் வாதிகளால் போலியாக உருவாக்கப்பட்டதா?

2. வாதிகளுக்கு தாவா தொகை பிரதிவாதிகளிடம் இருந்து வசூலித்து கிடைக்கத்தக்கதா?

3. வாதிகளுக்கு வழங்கத்தக்க பரிகாரம் என்ன?

5. வாதிகள்தரப்பில் வா.சா.1 முதல் வா.சா.3 வரையிலான சாட்சிகள் விசாரிக்கப்பட்டு வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.6 வரையிலான சான்றாவணங்களும், நீதிமன்ற சான்றாவணமாக நீ.ம.சா.ஆ.1ம் குறியீடு செய்யப்பட்டுள்ளது. பிரதிவாதிகள்தரப்பில் சாட்சிகள் எவரும் விசாரிக்கப்படவுமில்லை. சான்றாவணங்கள் எதுவும் குறியீடு செய்யப்படவுமில்லை.

**<u>6. எழுவினா 1 :</u>**

பிரதிவாதிகளால் வாதிகளுக்கு 02.08.2010 அன்று எழுதிக் கொடுக்கப்பட்டதாக கூறப்படும் ரூ.5,00,000/-த்திற்கான தாவா புரோநோட் வா.சா.ஆ.1 ஆக வாதிகள் தரப்பில்

குறியீடு செய்யப்பட்டுள்ளது. தாவா புரோநோட் போலியான ஆவணம் என்றும், அதிலுள்ள கையெழுத்துக்கள் பிரதிவாதிகளுடையது அல்ல என்றும், பிரதிவாதிகள் தரப்பில் கூறப்பட்டுள்ள நிலையில், அப்புரோநோட்டின் அடிப்படையில் வழக்கு தாக்கல் செய்துள்ள வாதிகள்தான் அப்புரோநோட்டில் உள்ள கையெழுத்துக்கள் பிரதிவாதிகளுடையதுதான் என்பதை நிரூபிக்க வேண்டும். வா.சா.1 ஆக சாட்சியம் அளித்துள்ள 1ம் வாதி அவருடைய சாட்சியத்தில், 2ம் வாதி தனது மனைவி என்றும், 1ம் பிரதிவாதி தன்னுடன் பிறந்த சகோதரர் என்றும், 2ம் பிரதிவாதி 1ம் பிரதிவாதியின் மனைவி என்றும், 02.08.2010 அன்று தாவா புரோநோட்டை எழுதிக்கொடுத்து பிரதிவாதிகள் தங்களிடம் ரூ.5,00,000/- வட்டிக்கு கடன் வாங்கினார்கள் என்றும் சாட்சியம் அளித்துள்ளார். தாவா புரோநோட்டில் சாட்சி கையொப்பம் இட்டுள்ள வா.சா.2 திருமதி. ரெஜினாமேரியும் அவரது சாட்சியத்தில், வாதிகளின் வீட்டிற்கு தான் 02.08.2010 அன்று சென்றிருந்தபோது அங்கிருந்த பிரதிவாதிகள் வாதிகளிடம் ரூ.5,00,000/- கடன்பெற்றுக்கொண்டு தாவா புரோநோட்டில் கையெழுத்திட்டு வாதிகளிடம் கொடுத்தார்கள் என்றும், அவ்வாறு அவர்கள் கையெழுத்துப் போட்டதை தான் பார்த்துவிட்டு தாவா புரோநோட்டில் சாட்சி கையெழுத்திட்டேன் என்றும், தான் சாட்சி கையெழுத்து போட்டதை பிரதிவாதிகளும் பார்த்தார்கள் என்றும் சாட்சியம் அளித்துள்ளார். வா.சா.2ன் சாட்சியம் தாவா புரோநோட்டில் உள்ள கையெழுத்துக்கள் பிரதிவாதிகளுடையதுதான் என்ற வாதிகளின் வழக்கை உறுதிப்படுத்தும் வகையில் உள்ளது. வா.சா.2ன் சாட்சியம் நம்பக்கூடியதல்ல என்பதற்கும், பிரதிவாதிகள் தரப்பில் எந்த ஆதாரங்களும் தாக்கல் செய்யப்படவில்லை.

7. தாவா புரோநோட்டில் உள்ள கையெழுத்துக்களை பிரதிவாதிகள் மறுத்ததால், 1ம் பிரதிவாதியின் ஒப்புக்கொள்ளப்பட்ட கையெழுத்துக்களையும், தாவா புரோநோட்டில் உள்ள பிரச்சினைக்குரிய 1ம் பிரதிவாதியின் கையெழுத்தையும், கையெழுத்து வல்லுநரைக் கொண்டு ஒப்பிட்டு பார்க்க வேண்டுமென்று வாதிகள் தரப்பில் மனு தாக்கல் செய்யப்பட்டு அம்மனு அனுமதிக்கப்பட்டு, தாவா புரோநோட்டும் 1ம் பிரதிவாதியின்

ஒப்புக்கொள்ளப்பட்ட கையெழுத்துக்கள் உள்ள ஆவணங்களும் அரசு கையெழுத்து வல்லுநரின் பரிசோதனைக்கு நீதிமன்றத்தால் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. அவற்றை ஆய்வு செய்த கையெழுத்து வல்லுநரான வா.சா.3 மேற்படி ஒப்புக்கொள்ளப்பட்ட கையெழுத்தும், தாவா புரோநோட்டில் உள்ள 1ம் பிரதிவாதியின் கையெழுத்தும் ஒரே நபரால் போடப்பட்ட கையெழுத்துக்கள்தான் என்று நீதிமன்றத்தில் அறிக்கை தாக்கல் செய்துள்ளார். அந்த அறிக்கை வா.சா.3ன்மூலம் நீ.ம.சா.ஆ.1ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. வா.சா.3ன் மேற்படி சாட்சியமும், தாவா புரோநோட்டில் உள்ள கையெழுத்துக்கள் பிரதிவாதிகளுடையதுதான் என்ற வாதிகளின் வழக்கை நிரூபிக்கும் வகையிலேயே உள்ளது. தாவா புரோநோட்டில் உள்ள கையெழுத்துக்கள் பிரதிவாதிகளுடையது அல்ல என்பதற்கு ஏற்கத்தக்க எந்த ஆதாரங்களும் பிரதிவாதிகள் தரப்பில் தாக்கல் செய்யப்படவில்லை. இந்நிலையில், தாவா புரோநோட் பிரதிவாதிகளால் வாதிக்கு எழுதிக்கொடுக்கப்பட்ட உண்மையான புரோநோட் என்றும், அந்த புரோநோட் வாதிகளால் போலியாக உற்பத்தி செய்யப்பட்டுள்ளது என்ற பிரதிவாதிகளின் வழக்கு எற்கத்தக்கதாக இல்லை என்றும் இவ்வெழுவினாவிற்கு இந்நீதிமன்றம் தீர்வு காண்கிறது,

**8. எழுவினா : 2**

தாவா புரோநோட்டில் உள்ள கையெழுத்துக்கள் பிரதிவாதிகளுடையது என்பதற்கு தகுந்த ஆதாரங்கள் வாதிகள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டு அப்புரோநோட்டின் நிறைவேற்றம் (Execution) நிரூபிக்கப்பட்டுள்ள நிலையில் அப்புரோநோட் தகுந்த மறுபயனுக்காக பிரதிவாதிகளால் வாதிகளுக்கு எழுதிக்கொடுக்கப்பட்டதாக நீதிமன்றம் பிரிவு 118 மாற்றுமுறை ஆவணச்சட்டத்தின் கீழ் நீதிமன்றம் அனுமானம் (presumption) செய்ய வேண்டும். அந்த அனுமானத்தை அதனை மறுக்கும் பிரதிவாதிகள்தான் தகுந்த ஆதாரங்கள்மூலம் எதிர்த்துரை (rebut) செய்ய வேண்டும். மேற்படி அனுமானத்தை எதிர்த்துரை செய்ய பிரதிவாதிகள் தரப்பில் ஏற்கத்தக்க எந்த ஆதாரங்களும் தாக்கல் செய்யப்படவில்லை. பிரதிவாதிகளுக்கு

ரூ.5,00,000/- கடன் கொடுக்கும் அளவிற்கு வாதிகளுக்கு வசதியில்லை என்று பிரதிவாதிகளால் எதிர் வழக்குரையில் ஆட்சேபணை செய்யப்படவில்லை. இந்நிலையில் வா.சா.1ஐ குறுக்குவிசாரணை செய்யும்போது ரூ.5,00,000/- கடன் கொடுக்கும் அளவிற்கு வாதிகளுக்கு வசதியுள்ளது என்பதற்கு வாதிகளால் ஆதாரங்கள் தாக்கல் செய்யப்படவில்லை என்று கூறி பிரதிவாதிகள் தரப்பில் வா.சா.1ஐ குறுக்குவிசாரணை செய்துள்ளது ஏற்கத்தக்கதல்ல. ஆகவே வாதி தரப்பு சாட்சியங்கள் மற்றும் சான்றாவணங்களிலிருந்தும், பிரிவு 118 மாற்றுமுறை ஆவண சட்டத்தின் கீழான அனுமானங்களிலிருந்தும், அந்த அனுமானங்கள் பிரதிவாதிகளால் எதிர்த்துரை செய்யப்படாததில் இருந்தும் வாதிகளின் வழக்கு தகுந்த ஆதாரங்கள்மூலம் நிரூபிக்கப்பட்டுள்ளது என்றும், எனவே வாதிகள் கோரியுள்ள தாவா தொகை வட்டியுடன் பிரதிவாதிகளிடம் இருந்து வாதிகளுக்கு கிடைக்கத்தக்கது என்றும் இவ்வெழுவினாவிற்கு இந்நீதிமன்றம் தீர்வு காண்கிறது.

**9. எழுவினா 3 :**

எழுவினா 1, 2ற்கு தீர்வு காணப்பட்டுள்ள வகையில், வாதி கோரியுள்ள தாவா தொகை, வட்டி மற்றும் செலவுத்தொகையுடன் வாதிகளுக்கு பிரதிவாதிகளிடமிருந்து கிடைக்கத்தக்கது என்ற பரிகாரம் மட்டும் வாதிகளுக்கு, கிடைக்கத்தக்கது என்று இவ்வெழுவினாவிற்கு இந்நீதிமன்றம் தீர்வு காண்கிறது.

முடிவில், வாதிகளின் வழக்கு அனுமதிக்கப்பட்டு, வாதிகளுக்கு பிரதிவாதிகள், தாவா தொகை ரூ.6,32,500/-ஐ வழக்கு தாக்கல் செய்யப்பட்ட தேதியிலிருந்து தீர்ப்பாணை தேதி வரை 12 சதவீத வருட வட்டியுடன் தீர்ப்பாணை தேதியில் இருந்து தொகை வசூலாகும் நாள் வரை 6 சதவீத வருட வட்டியுடனும் செலுத்த வேண்டுமென்று செலவுத்தொகையுடன் தீர்ப்பளிக்கப்படுகிறது.

இந்த தீர்ப்புரை என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் கணிணியில் விரிவாக்கம் செய்யப்பட்டு என்னால் சரிபார்க்கப்பட்டு 2018ம் ஆண்டு ஆகஸ்ட் திங்கள் 11ம் நாள் அவையறிய பகரப்பட்டது.

(ஒம்.) ஆர்.ஜோசப்ஜாய்,
இரண்டாவது கூடுதல் சார்பு நீதிபதி,
மதுரை.

<u>வாதி தரப்பு சாட்சிகள்</u>

வா.சா.1 திரு.ஜோசப் ஜேசுராஜ்
வா.சா.2 திருமதி. ரெஜினாமேரி
வா.சா.3 திரு.ஹாஜா மொகைய்தீன்

<u>வாதி தரப்புச் சான்றாவணங்கள்:-</u>

| | | |
|---|---|---|
| வா.சா.ஆ.1 | 02.08.2010 | புரோநோட் - அசல் |
| வா.சா.ஆ.2 | 15.06.2011 | வழக்கறிஞர் அறிவிப்பு - அலுவலக நகல் |
| வா.சா.ஆ.3 | 31.07.2011 | வழக்கறிஞர் அறிவிப்பு - அலுவலக நகல் |
| வா.சா.ஆ.4 | 27.06.2011 | பதிவுதபால் ஒப்புகை அட்டையுடன் |
| வா.சா.ஆ.5 | 11.08.2011 | எதிர்மனுதாரரால் அனுப்பப்பட்ட மறுப்பு அறிவிப்பு அசல் |
| வா.சா.ஆ.6 | - | ரெஜினாவின் ஆதார் அடையாள அட்டை நகல் |

**நீதிமன்ற சான்றாவணம் :**

நீ.ம.சா. 1 - 11.05.2017 தமிழ்நாடு அரசு வட்டார தடய அறிவியில் ஆய்வகத்திலிருந்து பெறப்பட்ட அறிக்கை அசல்

<u>பிரதிவாதிகள் தரப்பு  சாட்சிகள்:</u>-

இல்லை

<u>பிரதிவாதிகள் தரப்புச் சான்றாவணங்கள்:-</u>

இல்லை

(ஒம்.) ஆர்.ஜோசப்ஜாய்,
இரண்டாவது கூடுதல் சார்பு நீதிபதி,
மதுரை.